செய்தி வெளியீட்டு எண்.28 நாள்: 11.1.2011

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழக அரசிற்கும் – அப்போலோ டயர்ஸ் நிறுவனத்திற்கும் இடையே இன்று (11.1.2011) துணை புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

சென்னைக்கருகே ஒரகடத்திலுள்ள சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் ரேடியல் டயர்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அப்போலோ டயர்ஸ் நிறுவனம் அமைத்து வருகிறது. இத்திட்டத்தில், 5 ஆண்டு கால அளவில் 450 கோடி ரூபாய் முதலீடு செய்ய இந்நிறுவனம் முதலில் திட்டமிட்டது. ஏற்கனவே, இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசுக்கும் அப்போலோ டயர்ஸ் நிறுவனத்திற்கும் இடையே 7.8.2006 அன்று கையெழுத்திடப்பட்டது. அப்போலோ டயர்ஸ் நிறுவனத்தின் திட்டத்திற்கு அரசு தொகுப்புச் சலுகை வழங்கியுள்ளது.

உற்பத்திப் பொருளுக்கான தேவை மற்றும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு அரசு அளித்து வருகின்ற ஊக்கத்தினைக் கருத்தில் கொண்டு, 2100 கோடி ரூபாய் மொத்த முதலீட்டில் சரக்கு வண்டிகள் மற்றும் பேருந்துகளுக்கான ரேடியல் டயர் உற்பத்தித் திறனை நாளொன்றுக்கு 6000 ஆகவும் பயணிகள் சீருந்துக்கான ரேடியல் டயர் உற்பத்தித் திறனை நாளொன்றுக்கு 8000 ஆகவும் அதிகரிக்க அப்போலோ டயர்ஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இத்திட்டம் 1100 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளிக்க உள்ளதோடு 900 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்பினையும் உருவாக்கும். முதலீடு மற்றும் வேலை வாய்ப்பு குறித்து அப்போலோ டயர்ஸ் நிறுவனத்தின் பொறுப்புறுதிகள் மற்றும் அரசின் திருத்திய ஊக்கச் சலுகைகள் அடங்கிய துணை புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (11.1.2011) துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புதிய தலைமைச் செயலக வளாகத்தில் கையெழுத்திடப்பட்டது.

தமிழக அரசின் சார்பாக, தொழில் துறை முதன்மைச் செயலர் திரு. ராஜீவ் ரஞ்சன் அவர்களும் அப்போலோ டயர்ஸ் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் திட்டத் தலைவர் திரு.கே.பிரபாகர் அவர்களும் துணை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில் அரசு மற்றும் அப்போலோ டயர்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

==

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.